Deposition of Witness for : PW-1 | Date : 14/02/2023
Case No. : **O.S. 469/2019** | Nationality : Indian
Name : முருகன் | Religion :
Father's/Husband's Name : ராமசாமி | Age :53
Village :
Taluk :

வா.சா.1

சாட்சி சத்திய பிராமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

வா.சா.ஆ.1 கிரய ஆவணத்தில் கண்ட 1வது அயிட்ட சொத்தை பொறுத்து நான்கெல்லை குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். எனது வழக்குரையில் 1வது இனமாக குறிப்பிட்டுள்ள சொத்தை பொறுத்து வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் தான் பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரிதான். வழக்குரையில் கண்ட 1வது இன சொத்திற்கு எந்த அடிப்படையில் நான்கெல்லை குறிப்பிட்டுள்ளேன் என்றால் நாங்கள் வசிக்கும் இடத்தின் நான்கெல்லையை குறிப்பிட்டுள்ளேன். அந்த நான்கெல்லை என்னவென்றால் கிழக்கில் பள்ளிவாசல், மேற்கில் ஆனந்த் நஞ்சை வகையறா, தெற்கில் கும்பகோணம்- காரைக்கால் மெயின்ரோடு, வடக்கில் நாட்டாறு நான்கெல்லை ஆகும்.

படுகை நிலத்தின் சர்வே எண் என்னவென்றால் எனக்கு ஞாபகமில்லை. வா.சா.ஆ-1 ஆவணத்தில் படுகை நிலத்தில் சர்வே எண் இல்லை. படுகை நிலத்திற்கு வடக்கே வெள்ளக்கரை உள்ளது என்றால் சரிதான். வெள்ளக்கரைக்கு வடக்கே காரைக்கால் மெயின்ரோடு உள்ளது என்றால் சரிதான். காரைக்கால் மெயின்ரோட்டின் சர்வே எண்.217/1 என்றால் எனக்கு ஞாபகமில்லை. பிரதிவாதிகள் இருக்கும் இடத்தின் சர்வே எண்.217/2 என்றால் சரிதான். நான் குடியிருந்து வரும் வீட்டிற்கு வடக்கில் பிரதிவாதியின் சொத்து உள்ளது என்றால் சரிதான். எனது வழக்குரையில் 1வது இன

சொத்திற்கு வடக்கில் காரைக்கால் மெயின்ரோடு உள்ளது என்று குறிப்பிட்டுள்ளது தவறு என்றால் சரியல்ல. வெள்ளக்கரைக்கும் தெற்கே பொதுப்பணித்துறைக்கு சொந்தமான சொத்து உள்ளது.

வெள்ளக்கரை நேராக கிழக்கு மேற்காக செல்கிறது என்றால் சரிதான். வெள்ளக்கரைக்கும் எனக்கும் சம்மந்தமில்லை என்றால் சரிதான். வெள்ளக்கரையை ஆக்கிரமித்து தான் நான் இரும்பு கேட் அமைத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் இரும்பு கேட் அமைத்துள்ள இடம் யாருக்கு சொந்தமான இடம் என்றால் எனக்கு சொந்தமான இடம். அதன் சர்வே எண் என்னவென்றால் சர்வே எண். 218/9 ஆகும். அந்த இரும்பு கேட்டினை நான் பொதுப்பணித்துறைக்கு சொந்தமான சொத்தினை ஆக்கிரமித்து அமைத்துள்ளேன் என்றால் சரியல்ல.

வா.சா.ஆ.1 ஆவணத்தில் நான்கெல்லை குறிப்பிடாததால் சொத்தின் சுவாதீனம் என்னிடம் இல்லை என்றால் சரியல்ல. நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோருவதற்கு சொத்தின் நான்கெல்லைகள் சரியாக இருக்க வேண்டும் என்றாலும், நான் தவறாக நான்கெல்லை குறிப்பிட்டுள்ளதால் எனக்கு பரிகாரம் கிடைக்கதக்கதல்ல என்றாலும் சரியல்ல. பிரதிவாதியின் அனுபவத்திலும், சுவாதீனத்திலும் உள்ள சொத்திற்கு தெற்கு பக்கத்தில் நான் சட்டத்திற்கு புறம்பாக 500 அடி இடத்தை ஆக்கிரமித்து காம்பவுண்ட் சுவர் அமைத்துள்ளேன் என்றால் சரியல்ல. அவ்வாறு நான் ஆக்கிரமித்ததை நியாயப்படுத்துவதற்காகத்தான் நான் இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

அசல் வழக்கு எண்.32/2021 என்பது இவ்வழக்கு பிரதிவாதியின் மனைவி தாக்கல் செய்த வழக்கு என்றால் சரிதான். பிரதிவாதியின் மனைவிக்கு சொந்தமான சொத்தில் எனக்கு எந்த சம்மந்தமும் கிடையாது என்றால் சரிதான். 2 மற்றும் 3 வது இலக்க

சொத்துக்கள் ரோட்டிற்கு வடக்கு பக்கம் உள்ளதா என்றால் இல்லை. தெற்கு பக்கம் உள்ளது. அந்த சொத்துக்களுக்கு மேற்கே வாய்க்கால் உள்ளது என்றால் சரியல்ல. அந்த வாய்க்காலுக்கு மேற்கே பிரதிவாதி சொத்து உள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கில் நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை அளந்து பார்வையிட்டு தாக்கல் செய்துள்ள அறிக்கை மற்றும் வரைபடம் சரிதானா என்றால் சரிதான்.

பிரதிவாதியின் அனுபவத்தில் தான் நான் இடைஞ்சல் செய்து வருகிறேன் என்றாலும், எனது அனுபவத்தில் பிரதிவாதி இடஞ்சல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. எந்த தேதியில் பிரதிவாதி தாவா சொத்தில் இடஞ்சல் செய்தார் என்றால் 2014 மற்றும் 2015 வருடங்களில் இடஞ்சல் செய்தார். தேதி மற்றும் மாதம் ஞாபகமில்லை. பிரதிவாதி என்ன இடஞ்சல் செய்தார் என்றால் ஆட்களுடன் வந்து வேலியை பிரித்து ஆக்கிரமிக்க முயற்சி செய்தார். எந்த சொத்திலுள்ள வேலியை பிரிக்க முயற்சி செய்தார் என்றால் 1வது இன சொத்தில் உள்ள வேலியை பிரிக்க முயற்சி செய்தார்.

வா.சா.ஆ.1 ஆவணத்தில் நான் வேலியுடன் 1வது இன சொத்தை வாங்கியதாக குறிப்பிடவில்லை என்றால் பத்திரத்தில் குறிப்பிடவில்லை. அதனால் அந்த வேலி என்னுடையது அல்ல என்றாலும், பிரதிவாதியின் வேலியை நான் தான் பிரித்து ஆக்கிரமிக்க முயற்சி செய்தேன் என்றாலும் சரியல்ல. நான் ஆக்கிரமிக்க முயற்சி செய்ததை பிரதிவாதி சட்டப்படி தடுக்க முயற்சிப்பதற்குள் நான் முந்திக்கொண்டு இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமோ, அல்லது வேறு எந்த பரிகாரமோ கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

N SIVAPALANI Digitally signed by N SIVAPALANI

District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.